www.padippakam.com

# தமிழீழ மக்கள் விடுதலைக் கழகம்

## தமிழீழ மக்கள் விடுதலைக்கழக உறுப்பினர்கள் மூவர் தமிழீழ விடுதலைப் புலிகளால் அரியாலையில் வைத்து சுட்டுக்கொலை.

11.12.85 அன்று யாழ்ப்பாணம் அரியாலைப்பகுதிக்கு மணல் ஏற்ற வந்த தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கத்தினரை, அப்பகுதி கண்காணிப்புக்குழுவின் உதவியுடன் தடுத்த கழக த்தோழர் தாக்குதலுக்குள்ளாக்கப்பட்டார். கத்தியாலும், வாளாலும் அவர் வெட்டப்பட்டார். இப்பிரச்சினைக்கு சுமுகமான தீர்வொன்றைக்காண அவ்விடம் சென்ற தோழர்கள் மூவர் அவ்விடத்திலேயே தமிழீழ விடுதலைப்புலிகளால், விக்ரர் என்பவர் தலைமையில் உள்ள கோஷ்டியால் கத்தியால் வெட்டப்பட்டு பொல்லுகளால் தாக்கப்பட்டு, சித்திரவதை செய்யப்பட்டு பரிதாபகரமாக சுட்டுக்கொல்லப்பட்டுள்ளார்கள்.

மக்களுக்கு நியாயம் கிடைக்க நீதியான முடிவைத்தேடிச் சென்றவர்களுக்கு, தமிழீழ விடுதலைப் புலிகள் சித்திரவதையுடன் கூடிய மரணதண்டனையை வழங்கியுள்ளார்கள். அரியாலைப்பகுதியில் களவாக மணல் ஏற்றி வியாபாரம் செய்வது வழமையாக நடைபெற்று வருவதே. இது காரணமாக அப்பகுதி மக்கள் கடல் அரிப்பினால் நிலம் பறிபோகும் ஆபத்தை உணர்ந்து திருட்டு மணல் அள்ளும் நடவடிக்கையை தொடர்ந்து தடுத்துவந்துள்ளார்கள். கண்காணிப்புக்குழுவை நிறுவி தம் நிலப்பாதுகாப்பை உறுதிசெய்துகொண்டார்கள். கடந்த ஒரு மாத காலத்திற்கு மேலாக விடுதலைஇயக்கங்கள் துப்பாக்கி முனையில் மக்களை விரட்டிவிட்டு மணலை அள்ளி விற்று வந்தமையால், மக்கள் ஆத்திரத்திற்குள்ளாகி மனம் நொந்து, எமது மக்கள் அமைப்புத் தோழர்களை அணுகி முறையிட்டனர்.

ஆகவே எமது தோழர்கள் அப்பகுதி மக்கள் ஆதரவுடன் கள்ளமணல் ஏற்றிச்செல்லும் நபர்களை தடுத்துவந்துள்ளனர். இவ்வாறான ஒரு சம்பவமே 11-12-1985ல் நடைபெற்றதாகவும் அந்த மணல் ஏற்ற வந்தவர்களைத் தடுத்தபோது, அவர்கள் எமது தோழர்கள் சிலரையும், பொதுமக்கள் சிலரையும் தாக்கினார்கள். வாளாலும் கத்தியாலும் எமது தோழர்கள் தாக்கப்பட்டுள்ளார்கள். இச்சம்பவத்தையடுத்து ஏற்பட்ட பதட்டநிலையை தீர்த்து வைக்கவும், தொடர்ந்தும் அப்பகுதியில் மணல் ஏற்றிச் செல்வதால் ஏற்படும் ஆபத்தை விளக்கிடவும் எமது மக்கள் அமைப்பில் முக்கிய உறுப்பினர்களான கொக்குவிலைச் சேர்ந்த தோழர் இரவிமூர்த்தி, கைதடியைச் சேர்ந்த தோழர் பண்டா அரியாலையைச் சேர்ந்த தோழர் ஜெயதீஸ்வரன் ஆகியோர் சென்றனர்.

ஆனால் இப்பிரச்சினைக்குத் தீர்வொன்றைக்காண விரும்பாத தமிழீழ விடுதலைப்புலிகள் சமரசம் செய்ய வந்த கழக உறுப்பினர்களை தடிகளால் அடித்தும், கத்தியால் வெட்டியும் பின் துப்பாக்கியால் சுட்டும் படு கொலை செய்துள்ளனர். விடுதலைக்காக தம்மை ஒரு இய க்கத்துடன் இணைத்து சமூகத்தில் மக்களுடன் மக்களுக்காக வாழ்ந்து அம்மக்களின் பிரச்சினையில் முகம் கொடுக்கச்சென்ற தோழர்கள் இரத்தவெறிபிடித்த விடுதலைப் புலிகளால் படுகொலைசெய்யப்பட்டுள்ளார்கள்.

**எமது எதிரி யார் என்பதை சரியாக் அறிந்துகொள்ளமுடியாதவர்கள் விடுதலைப்பயணத்தில் ஒட்டுமொத்த குத்தகைக்கார மனப்பான்மையுடன் நடந்து கொண்டுள்ளார்கள்.**

இன்று இச்சம்பவம் மட்டுமல்ல, தமிழீழ விடுதலைப்புலிகளின் கொலைப்பட்டியல் தோழர் சுந்தரத்தில் இருந்து நீண்டுகொண்டே போகின்றது. இன்று இரவிமூர்த்தி, பண்டா ஜெயதீஸ்வரன் வரை வந்துள்ளது. மறைந்த எமது தோழர்களுக்கு எமது வீரஅஞ்சலியைச் செலுத்துகின்றோம்.

படிப்பகம்

www.padippakam.com

இப்படுகொலையைப் புரிந்த தமிழீழ விடுதலைப் புலிகளைச் சேர்ந்த கொலைகாரன் விக்ரரும் அவனது கூட்டாளிகளும், போராளிகளையும் பொதுமக்களையும், பல தடவைகளில் படுகொலை செய்ததன் மூலம் மக்களின் எதிர்ப்பைச் சம்பாதித்தவர்கள். இவர்களுக்கு எதிராக பொதுமக்கள் பல தடவை ஆர்ப்பாட்ட ஊர்வலம் உண்ணாவிரதம் இருந்த கதைகளும் உண்டு. இப்படிப்பட்ட சமூக விரோதசெயல்கள் புரியும் விக்ரர் போன்றவர்களையும், தமிழீழ விடுதலைப்புலிகளையும் வன்மையாகக் கண்டிப்பதுடன் இவர்களது இத்தகைய செயல்கள் முதலாளித்துவ அரசிற்கும் பிற்போக்குசக்திகளுக்குமே வாய்ப்பாக அமையுமென்பதையும் தெரிவித்து எச்சரிக்கின்றோம்.

மக்களை இணைத்துக்கொள்ளாது, மக்களிடமிருந்து ஆயுதங்களைக்காட்டி அடாவடித்தனங்கள் புரிவதாலும், மாற்றுக் கருத்துடையவர்களை படுகொலைசெய்வதிலும் தமிழீழ விடுதலைப்போராட்டம் பின்தள்ளப்படவே செய்யும் என்பதை அவர்கள் அறிய வேண்டும்.

இவ்வண்ணம், 13-12-1985

இரா. வாசுதேவா தமிழீழம்.

அரசியல் செயலரும், நிர்வாகப்பொறுப்பாளரும்,

தமிழீழ மக்கள் விடுதலைக்கழகம்.

☆ அனைத்து அடக்கு முறைகளையும் உடைத்தெறிவோம் ☆

People's Liberation Organization of Thamil Eelam, 46 Central Road, Worcester Park, Surrey KT4 8HY, U.K.

படிப்பகம்